**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**
**அ.வ.எண்.83/2020**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 15ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டுப் பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சியப் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சங்கர் | தொழில்: | |
| த/பெ: | பழனிவேல் | சமயம்: | இந்து |
| முகவரி: | குமாரபாளையம் | வயது: | 47 |
| தாலுக்கா: | குமாரபாளையம் | மாவட்டம்: | நாமக்கல் |

15.06.2026

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் பணியாற்றும் தலைமை எழுத்தாளர் ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபணப் பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனைப் படித்துப் பார்த்துக் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். இவ்வழக்கில் நான் இன்று தாக்கல் செய்துள்ள கீழ்க்கண்ட ஆவணங்களைக் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | – | அதிகாரக் கடிதம் | சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.1 |
| 2 | – | அடையாள அட்டை **(அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது)** | நகல் | பி.வா.சா.ஆ.2 |

**(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**